(முற்பகல் 9.40)

3. கவன ஈர்ப்பு.

சென்னை, நெற்குன்றம் ஸ்டாண்டர்டு பேப்பர் இன்டஸ்டிரீஸ் கார்ப்பொரேஷன் தொழிலாளர்களின் வேலையின்மையை யொட்டி ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து.

திரு. க. சுப்பு: பேரவைத் தலைவரவர்களே, சென்னை அருகே நெற்குன்றம் ஸ்டாண்டர்டு பேப்பர் இன்டஸ்டிரீஸ் கார்ப்பொரேஷனில் 10—6—1977 ஆம் தேதி முதல் தொழிலாளர்களின் வேலையின்மையை ஒட்டி அங்கு ஏற்பட்டுள்ள பதட்டநிலை குறித்து மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: நெற்குன்றத்தில் உள்ள ஸ்டாண்டர்ட் பேப்பர் இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன் என்னும் கூட்டாண்மை நிறுவனம் சிப்பங்கட்டப் பயன்படும் நீர் இறங்காக் காகிதங்களைத் தயாரிக்கின்றது. இந்த நிறுவனத்தில் 19 நிரந்தரத் தொழிலாளர்களும் 16 தற்காலிகத் தொழிலாளர்களும் அமர்த்தப்பட்டிருந்தனர். இந்த நிறுவனத்தின் கூட்டாளிகளுக்கிடையே ஒரு தகராறு ஏற்பட்டது. கூட்டாளிகளில் ஒருவரது ஆணைக்கிணங்க தொழிலாளர்கள் 10—6—1977 அன்று வேலை செய்வதை நிறுத்தினர். வேறு சில கூட்டாளிகள் மறு நாளே தொழிலாளர்களை வேலை தொடங்குமாறு அறிவுறுத்தியும், 22-7-1977 அன்று தான் மீண்டும் வேலை துவக்கப்பட்டது. நிறுவனம் மீண்டும் திறக்கப்பட்டபொழுது நிரந்தரத் தொழிலாளர்கள் மட்டுமே வேலைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளனர். நிலைமையில் முன்னேற்றம் ஏற்பட்டதும் தாற்காலிகத் தொழிலாளர்கட்கும் வேலை தரப்படும் என்றும் நிர்வாகம் அவர்கட்கு அறிவித்துள்ளது.

தொழிலாளர்கள் தாங்களாகவோ அல்லது ஏதாவது ஒரு தொழிற்சங்கம் மூலமாகவோ இதுவரை தொழிலாளர் துறை முன்பு இதுகுறித்து தொழிற்தகராறு எதுவும் எழுப்பவில்லை.

திரு. க. சுப்பு: பேரவைத் தலைவரவர்களே, இந்த நிறுவனத்தில் கூட்டாளிகளால் ஏற்படக்கூடிய தகராறால் அடிக்கடி இந்த நிறுவனம் மூடப்பட்டிருப்பதாகவும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தது போல், இந்த நிறுவனத்தை ஏற்று நடத்த தொழிலாளர்கள் முன்வந்திருப்பதாகவும் சொல்லப்படுகிறது ஆகவே, தொழிலாளர்களே ஏற்று நடத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவரவர்களே, இதுபற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை அணுகினால், அவர்கள் பரிசீலிப்பார்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) கோவை மாவட்டம், பெரியநாயக்கன் பாளையம் லெட்சுமி மிஷன் ஒர்க்கஸ் நிறுவனத்தில் கதவடைப்பு காரணமாக தொழிலாளர்கள் வேலை இழந்துள்ளதால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து.

* திரு. ஆ. நடராசன்
திரு. க. சுப்பு
திரு. ஆர். மணிமாறன்
} பேரவைத் தலைவரவர்களே, கோவை மாவட்டம் பெரியநாய்க்கன் பாளையத்திலுள்ள லட்சுமி மிஷின் ஒர்க்ஸ் லிமிடெட் நிறுவனம் கதவடைப்புக் காரணமாக ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலைவாய்ப்பு இழந்துள்ளதால் ஏற்பட்டுள்ள பதட்டநிலை குறித்து மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறோம்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: கோவை லட்சுமி மிஷின் ஒர்க்ஸ் சுமார் 2,500 தொழிலாளர்களை உடையது. இந்தத் தொழிலாளர்களுக்காக பத்து தொழிற்சங்கங்கள் பிரதிநிதித்துவம் பெற்றுள்ளன. இவைகளில் ஏழு தொழிற்சங்கங்கள்